# கோயம்புத்தூர் மாநகராட்சி

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு ஆர். வெங்கடாசலம்,<br>மேயர்,<br>கோயம்புத்தூர் மாநகராட்சி,<br>கோயம்புத்தூர்- 641 001 | மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,<br>வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி<br>மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள்,<br>நியமனக்குழு உறுப்பினர்,<br>நிலைக்குழு தலைவர்கள் மற்றும்<br>அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,<br>கோயம்புத்தூர் மாநகராட்சி.<br>அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,<br>கோயம்புத்தூர் மாநகராட்சி.<br>சட்டமன்ற உறுப்பினர்கள்<br>(கோவை கிழக்கு, மேற்கு,<br>தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்<br>சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்),<br>பாராளுமன்ற உறுப்பினர்கள்<br>(கோவை மற்றும் நீலகிரி<br>பாராளுமன்றத் தொகுதிகள்) |

**ந.க.எண் : 7238/ 2008 / எம்சி. 8 நாள் : 11.6.2008**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 17.6.2008 செவ்வாய்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

11.06.08

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

ஜுன் 2008 மாமன்ற சாதாரண கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| பொருளடக்கம் | |
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண் | இ). தீா்மானத்திற்குரிய பொருள் |
| 1 | நகரமைப்புப் பிரிவு - மேற்கு மண்டலம் - வாா்டு எண் 64 –சோ்மன் ராஜு நகா் -சாலை அமைக்க நில ஆா்ஜிதம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| 2 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - டாடாபாத் ராஜு ரோடு-மாநகராட்சி வணிக வளாக கடை- ஆவின் நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடா்பாக |
| 3 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - பட்டேல் ரோடு -மாநகராட்சி வணிக வளாக கடை- நுகா்பொருள் வாணிப கழக ரேசன் கடைக்கு ஒதுக்கீடு செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடா்பாக |
| 4 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வாா்டு எண் 30 – ஆம்னிபேருந்து நிறுத்த வளாக கடைகள்-முதல் தளம்-அரசு கேபிள் டி.வி. காா்ப்பரேஷனுக்கு ஒதுக்கீடு செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடா்பாக |
| 5 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வாா்டு எண் 31-சொா்ணாம்பிகா லேஅவுட் - பூங்கா அமைத்தல் -மதிப்பீடு ரூ. 25 இலட்சம்- மாமன்ற அனுமதி கோருதல் -தொடா்பாக |
| 6 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வாா்டு எண் 33-ஹட்கோ காலனி குறுக்கு வீதிகள் - மழைநீா் வடிகால் திரும்பக் கட்டுதல் பணி நிா்வாக அனுமதி கோருதல் -தொடா்பாக. |
| 7 | பொதுப்பிரிவு -திருமதி பி. மகேஸ்வரி பலநோக்கு சுகாதார பணியாளா்-தாராபுரம் நகராட்சிக்கு பணிமாறுதல் கோருதல்-மாமன்ற அனுமதி கோருதல் -தொடா்பாக |
| 8 | பொதுப்பிரிவு -திருமதி எக்ஸ்.பிலோமினா பலநோக்கு சுகாதார பணியாளா்-சென்னை மாநகராட்சிக்கு பணிமாறுதல் கோருதல்-மாமன்ற அனுமதி கோருதல் -தொடா்பாக |
| 9 | Jnnurm-பாதாள சாக்கடைத் திட்டம்-பணித்தொகுப்பு III- திருத்திய மதிப்பீடு – மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடா்பாக |
| 10 | Jnnurm-பாதாள சாக்கடைத் திட்டம்-பணித்தொகுப்பு II- திருத்திய மதிப்பீடு – மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடா்பாக |
| 11 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வாா்டு எண் 55-முத்தையாா் உடையாா் வீதி – வாய்க்கால் கட்டுதல் பணி –மதிப்பீடு ரூ.25 இலட்சம்- நிா்வாக அனுமதி கோருதல் -தொடா்பாக |
| 12 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வாா்டு எண் 51-காந்தி பூங்கா-அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் -மதிப்பீடு ரூ.25 இலட்சம்-நிா்வாக அனுமதி கோருதல் -தொடா்பாக |
| 13 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வாா்டு எண் 37-திருமால் வீதி பிரசவ மருத்துவமனை கட்டுதல் - மதிப்பீடு 25 இலட்சம்- நிா்வாக அனுமதி கோருதல் - தொடா்பாக |
| 14 | நகரமைப்புப் பிரிவு -மேற்கு மண்டலம் -குமாரபாளையம் கிராமம் - நகரளவு எண் 128/ 2, - 2.05 ஏக்கா் நிலம் -பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக |
| 15 | நகரமைப்புப் பிரிவு -வடக்கு மண்டலம் -பீளமேடு மயானம்- மின்சார எரியூட்டு சாதனம் அமைத்தல் - M/s. P.S.G. & Sons Charities நிறுவனம்-நிா்வாகக்குழு மாற்றி அமைத்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடா்பாக |
| 16 | பொதுப்பிரிவு-மயான உதவியாளா் பணியிடங்கள் உருவாக்குதல் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடா்பாக |
| 17 | பொதுப்பிரிவு -மாமன்ற உறுப்பினா்கள் பிற உள்ளாட்சி அமைப்புகளின் திட்டங்களை நேரில் கண்டறிதல் - பயணம் மேற்கொண்டது-அரசின் பின்னேற்பு கோருதல் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடா்பாக |
| 18 | பொது சுகாதாரம் -அவசர மருத்துவ சிகிச்சை மேலாண்மை ஆராய்ச்சி நிலையம் - 20 ஆம்புலன்ஸ் வாகனம் வாங்கி வழங்குதல்-மாமன்ற அனுமதி கோருதல் -தொடா்பாக |

| | |
|---|---|
| **19** | **Jnnurm**-மழைநீர் வடிகால் திட்டம்-திட்ட அறிக்கை - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **20** | பொறியியல் பிரிவு -தெற்கு மண்டலம் -குரு ஹோட்டல் அருகில் வாகன நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம்-ஒப்பந்தப்புள்ளி ஏற்றல்-உரிமம் ஒப்படை செய்யப்பட்டது-பின்னேற்பு அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **21** | பொது சுகாதாரம் -வ.உ.சி. உயிரியல் பூங்கா-எட்டிமடை கிராமத்திற்கு மாற்றுதல் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **22** | கணக்குப் பிரிவு -மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் -சந்தா தொகை மற்றும் சேவைக் கட்டணம் செலுத்துதல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் தொடர்பாக |
| **23** | பணியமைப்பு - திரு கே. சரவணக்குமார், இளநிலை பொறியாளர் - உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு செய்தல் -மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **24** | **Jnnurm**-திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் - ஒப்பந்ததாரருக்கு நிலம் ஒப்படைத்தல் -அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது-மாமன்றம் பதிவு செய்தல்-தொடர்பாக |
| **25** | **Jnnurm**-நீர்நிலைகள் மேம்படுத்துதல் - அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது-மாமன்றம் பதிவு செய்தல்-தொடர்பாக |
| **26** | பொறியியல் பிரிவு - நடமாடும் தண்ணீர் கசிவு கண்டறியும் மற்றும் பழுதுபார்க்கும் வாகனம் வாங்குதல் -மாமன்ற அனுமதி வேண்டுதல்-தொடர்பாக |
| **27** | **Jnnurm**-பாதாள சாக்கடைத் திட்டம் - பணித்தொகுப்பு I- ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது- மாமன்றம் முடிவு செய்தல்-தொடர்பாக |

இணைப்பு -2

நன்றியுரை

## திருக்குறள்

**அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்**
**தொகையறிந்த தூய்மை யவர்.**

**(குறள் -711)**

## விளக்கம்

**ஒவ்வொரு சொல்லின் தன்மையையும் உணர்ந்துள்ள நல்ல அறிஞர்கள், அவையில் கூடியிருப்போரின் தன்மையையும் உணர்ந்து அதற்கேற்ப ஆராய்ந்து பேசுவார்கள்.**

திருவள்ளுவர்.

---

## ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

---

## பொருள் எண் 1

**28.4.2008 மற்றும் 28.5.2008- ம் தேதிய மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் மீண்டும் மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.**

**பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட சங்கனூர் கிராமம், க.ச. எண். 145ஏ/1, உள்ளிட்ட புலங்களில் வசித்து வரும் பொதுமக்கள் வார்டு எண். 64 சேர்மன் ராஜநகர் பகுதிக்கு மேட்டுப்பாளையம் சாலையில் இருந்து கிழக்கு நோக்கி அணுகுசாலையாக பொதுமக்களால் உபயோகப்படுத்தப்பட்டு வந்த சாலை தற்சமயம் நீதிமன்ற உத்தரவுப்படி தனியார் இடம் என தீர்ப்பு பெறப்பட்டுள்ளதால் நில சொந்தக்காரர் வேலி போட்டு சாலையை அடைத்துள்ளார் எனவும் மீண்டும் சாலை அமைத்துத் தரும்படியும் கோரியுள்ளது – குறித்து.**

----------

**கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட சங்கனூர் கிராமம் க.ச. எண். 145ஏ / 2 புலத்தில் 500 அடி நீளத்திற்கு தனியாருக்கு சொந்தமான சாலை பொதுமக்கள் உபயோகத்திற்கு அவசியமாக தேவைப்படுவதால் நில ஆர்ஜிதம் மூலம் நிலத்தை கையகப்படுத்தி சாலை அமைக்கவும், கையகப்படுத்தப்படும் நிலப்பரப்பிற்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் தொகையினை சம்பந்தப்பட்ட நில உரிமையாளருக்கு இழப்பீட்டு தொகையாக வழங்கவும் மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**

**நகரமைப்புக்குழு தனது தீர்மான எண். 46, நாள். 26.2.2008 –ல் அணுகுசாலை அமைக்க கோரும் நிலத்தின் உரிமையை சரிபார்த்து அதில் அரசு நிலம் ஏதும் இருப்பின் அதுபோக மீதமுள்ள தனியார் நிலத்தை கையகப்படுத்தி 23 அடி அகல சாலை அமைக்கலாம் என பரிந்துரை செய்து தீர்மானித்துள்ளது.**

**அலுவலகக் குறிப்பு . அனுமதிக்கலாம் ந.க. எண். 20681 / 07 / எச்1 (மே).**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 102 நாள் : 17.06.08</u>**

**பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள சேர்மேன் ராஜு நகர் பொதுமக்கள் உபயோகத்திற்கு அணுகுசாலை அமைக்க 1103 சதுர அடி நிலம் தானமாக மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த இடம் தற்பொழுது பொதுமக்களால் வழித்தடமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே பொருளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நில ஆர்ஜிதம் தேவையில்லை என்பதனால் பொருள் ரத்து செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 2

**பொருள்: வணிக வளாகம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - டாடாபாத் ராஜு ரோடு மாநகராட்சி வணிக வளாகம் - கடை எண். 2ஐ ஆவின் நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்வது – தொடர்பாக.**

-------------

**கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் டாடாபாத் ராஜு ரோடு மாநகராட்சி வணிக வளாகம் கடை எண்.2ஐ ஒதுக்கீடு செய்து தருமாறு ஆவின் நிறுவன பொது மேலாளர் தனது 11.01.2008 மற்றும் 18.01.2008ம் தேதிய விண்ணப்பத்தில் கேட்டுள்ளார்.**

**மேற்கண்ட கடை டாஸ்மாக் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. டாஸ்மாக் நிறுவனம் காலி செய்த பின்னர், கடந்த 23.01.2008ல் நடைபெற்ற பொது ஏலத்தில் எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. எனவே, மேற்கண்ட ஆவின் நிறுவனத்திற்கு பொதுப்பணித்துறை வழிகாட்டு நெறிப்படி மாநகராட்சி நிர்ணயம் செய்யும் மாத வாடகை அடிப்படையில் கடையை ஒதுக்கீடு செய்யலாம்.**

**பொதுப்பணித்துறை வழிகாட்டு நெறிப்படி மாநராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை ரூ.2400/- ஆகும். ஆனால் ஏற்கனவே டாஸ்மாக் நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போது ரூ.3000/- மாத வாடகை செலுத்தப்பட்டு வந்தது. எனவே ஆவின் நிறுவனத்திற்கும் ரூ.3000/- மாத வாடகை அடிப்படையிலேயே கடை எண்.2ஐ ஒதுக்கீடுசெய்யலாம்.**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தற்சமயம் கூடாததால் அவசர அவசியம் கருதி வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டு மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 00550/2008/ஏ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 103 நாள் : 17.06.08**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 3**

பொருள் : வணிக வளாகம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - பட்டேல் ரோடு மாநகராட்சி வணிக வளாகம் - கடை எண். 28- ஐ நுகர்பொருள் வாணிப கழக ரேசன் கடைக்கு ஒதுக்கீடு செய்வது – தொடர்பாக.

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் பட்டேல் ரோடு மாநகராட்சி வணிக வளாகம் கடை எண்.28ஐ நுகர்பொருள் வாணிபகழக ரேசன் கடைக்கு ஒதுக்கீடு செய்து தர அதன் நிர்வாக மேலாளர் தனது 14.02.2008ம் தேதிய கடிதத்தில் கேட்டுள்ளார்.

மேற்கண்ட கடையை பொதுப்பணித்துறை வழிகாட்டு நெறிப்படி மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ரூ.3390/- என்ற மாதாந்திர வாடகை அடிப்படையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் ரேசன் கடைக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

மேற்கண்ட கடை பலமுறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் எவரும் ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை. தற்போது நுகர்பொருள் வாணிப கழக ரேசன் கடைக்கு ஒதுக்கீடு செய்தால் மாநகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பை தவிர்ககலாம்.

தற்சமயம் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூடாததால் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டு பட்டேல் ரோடு கடை எண்.28ஐ நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு ஒதுக்கீடு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 15936/2008/ஏ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 104 நாள் : 17.06.08**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 4**

பொருள்: வணிக வளாகம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - வார்டு எண்.30 – சத்தி சாலையில் உள்ள ஆம்னி பேருந்து நிறுத்த வளாகத்தில் இராதாகிருஷ்ணா சாலை பக்கமாக உள்ள கடைகளின் முதல் தளத்தில் கட்டுமானப் பணி முடிவுறும் தறுவாயில் உள்ள கட்டிடத்தை அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷனுக்கு ஒதுக்கீடு செய்வது தொடர்பாக.

------------

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் சத்தி சாலை ஆம்னி பேருந்து நிறுத்த வளாகத்தில் இராதாகிருஷ்ணா சாலை பக்கமாக உள்ள கடைகளின் முதல் தளத்தில் கட்டுமான பணி முடிவுறும் தறுவாயில் உள்ள கட்டிடத்தை அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷனுக்கு ஒதுக்கீடு செய்து தர கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தனது 23.04.2008ம் தேதிய கடிதத்தில் கேட்டுள்ளார்.

மேற்கண்ட கடையை பொதுப்பணித்துறை வழிகாட்டு நெறிப்படி மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ரூ.38,500/- என்ற மாதாந்திர வாடகை அடிப்படையில் அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷனுக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தற்சமயம் கூடாததால் அவசர அவசியம் கருதி வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவர் அனுமதி பெற்று மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 6344/2008/ஏ1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 105 நாள் : 17.06.08</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 5

கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு - வார்டு எண் 31 – சொர்ணாம்பிகா லேஅவுட்டில் உள்ள மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் அமைத்தல் பணிக்கென தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 25,00,000/- க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல்.

மேற்படி இடத்தில் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் அமைக்க வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார். இதனை உதவி நிர்வாகப் பொறியாளர் நேரில் ஆய்வு செய்து வழங்கப்பட்ட அறிவுரையின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 25,00,000/- க்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் ந.க.எண் 7143/ 08/ எம் டி 2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 106 நாள் : 17.06.08</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 6

கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு எண் 3- வார்டு எண் 33– ஹட்கோ காலனி குறுக்கு வீதிகளில் மழைநீர் வடிகால் திரும்ப கட்டுதல் பணிக்கென தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 25,00,000/- க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல்.

மேற்படி வீதிகளில் மழைநீர் வடிகால் திரும்ப கட்ட வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார். இதனை உதவி நிர்வாகப் பொறியாளர் நேரில் ஆய்வு செய்து வழங்கப்பட்ட அறிவுரையின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 25,00,000/- க்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதி அளிக்கலாம் ந.க.எண் 6841/ 08/ எம் டி 2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 107 நாள் : 17.06.08</u>

அலுவலகக் குறிப்பு அனுமதி அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 7

பொருள் - பணியமைப்பு - கோவை மாநகராட்சி – திருமதி பி. மகேஸ்வரி, பலநோக்கு சுகாதார பணியாளர், செல்வபுரம் நகர் நல மையம் - தாராபுரம் நகராட்சிக்கு மாறுதல் கோருவது –தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சி செல்வபுரம் நகர் நல மையத்தில் பலநோக்கு சுகாதார பணியாளராக பணிபுரியும் திருமதி பி. மகேஸ்வரி அவர்களுக்கு சொந்தஊர் தாராபுரம் என்பதாலும், தனது குடும்ப சூழ்நிலை காரணமாகவும் தனக்கு தாராபுரம் நகராட்சிக்கு பணிமாற்றம் செய்து தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

எனவே, திருமதி பி. மகேஸ்வரி, பலநோக்கு சுகாதார பணியாளரை தாராபுரம் நகராட்சியில் பலநோக்கு சுகாதார பணியாளர் பணியிடத்திற்கு ஒருவழி மாறுதல் செய்ய மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப் பின் மேற்படி தீர்மானத்தை ஆணையர், தாராபுரம் நகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கும் அனுப்பலாம்.

ந.க.எண் 5855/ 08/ எம் சி. 3

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 108 நாள் : 17.06.08</u>

விண்ணப்பதாரரின் கோரிக்கையினை நிராகரிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. காலியாக உள்ள பலநோக்கு சுகாதாரப் பணியாளர் பணியிடங்களை நிரப்பிய பின்பு கோரிக்கையினை பரிசீலனை செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 8

பொருள் - பணியமைப்பு - கோவை மாநகராட்சி – திருமதி எக்ஸ். பிலோமினா, பலநோக்கு சுகாதார பணியாளர், கே.கே.புதூர் நகர் நல மையம் - சென்னை மாநகராட்சிக்கு மாறுதல் கோருவது –தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சி கே.கே.புதூர் நகர் நல மையத்தில் பலநோக்கு சுகாதார பணியாளராக பணிபுரியும் திருமதி எக்ஸ். பிலோமினா அவர்களுக்கு சொந்தஊர் சென்னை என்பதாலும், தனது குடும்ப சூழ்நிலை காரணமாகவும் தனக்கு சென்னை மாநகராட்சிக்கு பணிமாற்றம் செய்து தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

எனவே, திருமதி எக்ஸ். பிலோமினா, பலநோக்கு சுகாதார பணியாளரை சென்னை மாநகராட்சியில் பலநோக்கு சுகாதார பணியாளர் பணியிடத்திற்கு ஒருவழி மாறுதல் செய்ய மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப் பின் மேற்படி தீர்மானத்தை ஆணையர், சென்னை மாநகராட்சி மற்றும் நகராட்சிநிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கும் அனுப்பலாம்.

ந.க.எண் 1265/ 08/ எம் சி. 3

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 109 நாள் : 17.06.08</u>

விண்ணப்பதாரரின் கோரிக்கையினை நிராகரிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. காலியாக உள்ள பலநோக்கு சுகாதாரப் பணியாளர் பணியிடங்களை நிரப்பிய பின்பு கோரிக்கையினை பரிசீலனை செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் : 9

மத்திய அரசின் நகர்புற வளர்ச்சி துறையின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோவை மாநகராட்சியில் பாதாள சாக்கடைத்திட்டத்தினை ரூ. 377.13 கோடி மதிப்பில் செயல்படுத்த தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையினை மத்திய நகர்புற வளர்ச்சி துறையின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்பு குழுவினால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்கு தமிழக அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநிர் வழங்கல் ( ந.நி.3) துறையின் அரசாணை(3டி) எண் 25 நாள் 24.10.07 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டத்தினை தமிழ் நாடு நகர்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் கடன் உதவி பெற்று திட்டத்தினை மேற்கொள்ள மாமன்றம் தனது தீர்மான எண் 117 நாள் 24.09.07 ன் மூலம் ஒப்புதல் வழங்கி உள்ளது.

இத்திட்டத்தினை கீழ்கண்டவாறு ஆறு பணித்தொகுப்புகளாக மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| பணித் தொகுப்பு | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | தொழில் நுட்ப அங்கீகாரம் |
|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர்மாநகராட்சி மண்டலங்கள் I, II, V, & VI குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்ட கழிவு நீர் பிரதான குழாய், பகிர்மானக் குழாய், இணைப்பு குழாய் மற்றும் சோதனைக்குழிகள் அமைக்கும் பணி. | 6918.00 | 114.2007/08 |
| 2. | கோயம்புத்தூர் மாநகராட்சி மண்டலங்கள் III & VII குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்ட கழிவு நீர் பிரதான குழாய், பகிர்மானக் குழாய், இணைப்பு குழாய் மற்றும் சோதனைக்குழிகள் அமைக்கும் பணி. | 5221.00 | 115.2007/08 |
| 3. | கோயம்புத்தூர் மாநகராட்சி மண்டலங்கள் IV & VIII குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்ட கழிவு நீர் பிரதான குழாய், பகிர்மானக் குழாய், இணைப்பு குழாய் மற்றும் சோதனைக்குழிகள் அமைக்கும் பணி. | 10301.00 | 116.2007/08 |
| 4. | உக்கடம் பகுதியில் 70 MLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் | 5637.00 | 14/1/2008 |
| 5. | நஞ்சுண்டாபுரம் பகுதியில் 40 MLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் | 3463.00 | 14/1/2008 |
| 6. | ஒண்டிபுதூர் பகுதியில் 60 MLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் | 5121.00 | – |

மேற்கண்ட பணித் தொகுப்புகளில் பணித்தொகுப்பு III க்கு கடந்த 09.04.08 ல் தேசிய அளவிலான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரபெறவில்லை. எனவே, மேற்படி பணி தொகுப்பிற்கான மதிப்பீடு பொது பணித்துறையின் 2008–09 ஆம் ஆண்டிற்கான தரப்படுத்தப்பட்ட விலை அட்டவணையின் அடிப்படையில் ரூ. 11333.00 இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டிற்கு கடந்த 14.05.08ல் நகராட்சி நிர்வாக ஆணையரக கண்காணிப்பு பொறியாளரின் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு தேசிய அளவிலான ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

அலுவலக குறிப்பு

1. மேற்படி பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகை ஏற்கனவே நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதிட்டஒதுக்கீட்டு தொகை ரூ. 37713.00 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பதால் திருத்திய மதிப்பீட்டிற்கு (ரூ. 11333.00 இலட்சம்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 12069/2006/எம்.சி.மேன், பேக்கேஜ் III

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 110 நாள் : 17.06.08**

பாதாள சாக்கடைத் திட்டம் பணித்தொகுப்பு III-க்கு தேசிய அளவிலான மறு ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் : 10

மத்திய அரசின் நகர்புற வளர்ச்சி துறையின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோவை மாநகராட்சியில் பாதாள சாக்கடைத்திட்டத்தினை ரூ. 377.13 கோடி மதிப்பில் செயல்படுத்த தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையினை மத்திய நகர்புற வளர்ச்சி துறையின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்பு குழுவினால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்கு தமிழக அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநிர் வழங்கல் ( ந.நி.3) துறையின் அரசாணை(3டி) எண் 25 நாள் 24.10.07 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டத்தினை தமிழ் நாடு நகர்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் கடன் உதவி பெற்று திட்டத்தினை மேற்கொள்ள மாமன்றம் தனது தீர்மான எண் 117 நாள் 24.09.07 ன் மூலம் ஒப்புதல் வழங்கி உள்ளது.

இத்திட்டத்தினை கீழ்கண்டவாறு ஆறு பணித்தொகுப்புகளாக மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| பணித் தொகுப்பு | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | தொழில் நுட்ப அங்கீகாரம் |
|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர்மாநகராட்சி மண்டலங்கள் I, II, V, & VI குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்ட கழிவு நீர் பிரதான குழாய், பகிர்மானக் குழாய், இணைப்பு குழாய் மற்றும் சோதனைக்குழிகள் அமைக்கும் பணி. | 6918.00 | 114.2007/08 |
| 2. | கோயம்புத்தூர் மாநகராட்சி மண்டலங்கள் III & VII குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்ட கழிவு நீர் பிரதான குழாய், பகிர்மானக் குழாய், இணைப்பு குழாய் மற்றும் சோதனைக்குழிகள் அமைக்கும் பணி. | 5221.00 | 115.2007/08 |
| 3. | கோயம்புத்தூர் மாநகராட்சி மண்டலங்கள் IV & VIII குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்ட கழிவு நீர் பிரதான குழாய், பகிர்மானக் குழாய், இணைப்பு குழாய் மற்றும் சோதனைக்குழிகள் அமைக்கும் பணி. | 10301.00 | 116.2007/08 |
| 4. | உக்கடம் பகுதியில் 70 MLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் | 5637.00 | 14/1/2008 |
| 5. | நஞ்சுண்டாபுரம் பகுதியில் 40 MLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் | 3463.00 | 14/1/2008 |
| 6. | ஒண்டிபுதூர் பகுதியில் 60 MLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் | 5121.00 | – |

மேற்கண்ட பணித் தொகுப்புகளில் பணித்தொகுப்பு II க்கு கடந்த 09.04.08 ல் தேசிய அளவிலான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரே ஒரு நிறுவனம் மட்டும் ஒப்பந்தப்புள்ளி வழங்கியிருந்தது. அந்நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆவணங்களை கடந்த 12.05.08ல் கூராய்வு செய்த மாநில தொழில் நுட்ப ஆய்வு குழு மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதியற்ற ஒப்பந்தப்புள்ளியாக இருப்பதினால் மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அறிவுறுத்தியுள்ளது.

எனவே ஷ மதிப்பீட்டினை 2008–2009 ஆம் ஆண்டிற்கான தரப்படுத்தப்பட்ட விலை அட்டவணையின் அடிப்படையில் ரூ. 5708.00 இலட்சம் மதிப்பில் திருத்திய மதிப்பீடு தயார் செய்து தொழில் நுட்ப அனுமதி பெற மாமன்றத்தின் ஒப்புதல் கோரி சமர்பிக்கப்பட்டுள்ளது.

அலுவலக குறிப்பு

1. மேற்படி பணிக்கான திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கலாம். திட்ட ஒதுக்கீட்டு தொகையை விட கூடுதலாக ஏற்படும் செலவினத்தை (ரூ. 4.67 கோடி) மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ள ஒப்புதல் வழங்கலாம்.

2. மேற்படி மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையரக கண்காணிப்பு பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 12069/ 2006/ எம்.டி.மேன், பேக்கேஜ் II

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 111 நாள் : 17.06.08**

**1) 2008.09 ம் ஆண்டின் விலைவிவரப் பட்டியலுக்கு தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ. 5708 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கி தேசிய அளவிலான மறுஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது.**

**2) திட்ட ஒதுக்கீட்டு தொகையைவிட கூடுதலாக ஏற்படும் செலவினத் தொகையினை மாகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய ஒப்புதல் அளிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 11

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் – பிரிவு எண்.3ல் வார்டு எண். 55ல் உள்ள முத்தையார் உடையார் வீதி கிழக்குப்புறத்தில் வாய்க்கால் கட்டுதல் – மதிப்பீடு ரூ.25,00,000/–

மேற்படி முத்தையார் உடையார் வீதியில் சாக்கடைநீர் மற்றும் மழைநீர் செல்ல வழியில்லாமல் தேங்கி நிற்பதால் துர்நாற்றம், பொதுமக்களுக்கு மிகுந்த சுகாதாரக்கேடும், போக்குவரத்திற்கு இடையூறும் ஏற்படுகிறது.

இப்பணிக்கு 2008–09ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, பணியின் அவசியம் கருதியும், இவ்வார்டு மாமன்ற உறுப்பினர் 2.4.08ந்தேதி கேட்டுக் கொண்டதன் பேரிலும் ரூ.25,00,000/–க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:அனுமதிக்கலாம் ந.க.எண்.3619/08/MD4

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 112 நாள் : 17.06.08**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 12

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு 51–க்குட்பட்ட காந்தி பூங்காவிற்கு அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.25,00,000/–க்கு தயாரிக்கப் பட்டுள்ளது. இந்த பூங்கா அமைக்கப்பட்டு பல வருடங்கள் ஆகிறது. தற்சமயம் பூங்காவில் ஒரு லட்சம் பொதுமக்கள் பயன்பெறுகிறார்கள். மேலும் இப்பூங்காவில் Turf wall கட்டப்படாத இடங்களில் கட்டுவதற்கும் மற்றும் அலங்கார விளக்குகள், அமரும் இருக்கைகள், நடைபாதைகள் பழுதடைந்து உள்ளது. எனவே பொதுமக்களின் அவசியம் கருதி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.25,00,000/– நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.4358/08/ MD4

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 113 நாள் : 17.06.08**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 13

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் – வார்டு 37ல் உள்ள திருமால் வீதி மருந்தகத்திற்கு மேல் முதல் தளத்தில் பிரசவ ஆஸ்பத்திரி கட்டுதல். மதிப்பீடு ரூ.25,00,000/–

மேற்கண்ட பொருளின்படி கோவை மாநகராட்சி – வார்டு எண்.37ல் உள்ள திருமால் வீதி மருந்தகத்திற்கு மேல் மாமன்ற உறுப்பினர் 37வது வார்டு அவர்கள் கூடுதலாக முதல் தளத்தில் பிரசவ ஆஸ்பத்திரி கட்டித்தர கடிதம் சமர்ப்பித்துள்ளார். மேலும் கட்டிடம் அமைந்துள்ள பகுதியில் நிறைய குடியிருப்புகள் அமைந்துள்ளதால் பிரசவ ஆஸ்பத்திரி கட்டுவது மிகவும் அவசியமாகிறது. எனவே, இப்பணியின் அத்தியாவசியம் கருதி, மதிப்பீடு ரூ.25,00,000/–க்கு முதல் தளத்தில் கூடுதலாக பிரவச ஆஸ்பத்திரி கட்டுவதற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பணியினை செய்ய நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.6420/08/MD4

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 114 நாள் : 17.06.08**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 14

மனுதாரர் - கோவை மாநகரம் மேற்கு மண்டலம் சொக்கம்புதூர் சாலை பகுதியில், குமாரபாளையம் கிராமம், க.ச.எண் 22-ன் பகுதியில் அமைந்துள்ள இடத்தினையும், மற்றும் நகரளவு எண். 128/ 2-ல் உள்ள 2.05 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள இடத்தினையும் பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்து தரக்கோரி, நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு உள்ளூர் திட்டக்குழுமத்தின் மூலம் அனுப்பக்கோரி விண்ணப்பித்துள்ளார்.

உத்தேச பல அடுக்குமாடி கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யக்கோரும் மனையிடம், க.ச.எண் 22-ன் பகுதி குமாரபாளையம் விரிவு அபிவிருத்தி திட்ட எண். 4-ன் பகுதியிலும் மற்றும் நகரளவு எண். 128/2-ல் அமைந்துள்ள இடம் கோயம்புத்தூர் விரிவு அபிவிருத்தித் திட்ட எண். 18-ன் பகுதியிலும் அமைகிறது. இவ்விரு திட்டங்களின்படியும் இம்மனையிடப் பகுதி குடியிருப்பாக அமைகிறது. மனையிடத்திற்கு அணுகுபாதையாக நிலையில் உள்ள சொக்கம்புதூர் சாலை உள்ளது. இம் மனையிடத்தில் 26.0 மீட்டர் உயரத்திற்குள் பலஅடுக்கு மாடி குடியிருப்புக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யக் கோரியுள்ள விண்ணப்பம் மற்றும் வரைபடத்தினை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் செய்யலாம். ந.க.எண் 4656/ 2008/H 1 (மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 115 நாள் : 17.06.08**

**பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள மனையிடத்திற்கு செல்லும் 60 அடி அகல சாலை மனுதாரரால் மாநகராட்சிக்கு உடனடியாக ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் அலுவலகக் குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**மேலும், இறுதியாக கட்டிட அனுமதி வழங்குவதற்கு முன்பு ஒப்படை செய்யப்பட்ட மேற்படி 60 அடி அகல சாலையினை மனுதாரர் மேம்படுத்தி, அபிவிருத்தி செய்து தரவேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 15

கோவை மாநகராட்சி, வடக்கு மண்டலம், விளாங்குறிச்சி கிராமம், க.ச. எண். 302/2பி மயான நிலத்தில் 1.49 ஏக்கர் பரப்பளவு நிலத்தை பீளமேடு பொது நல நிறுவனத்திற்கு ரூ.102 இலட்சம் குத்தகை அடிப்படையில் மின்சார எரியூட்டு சாதனம் அமைப்பதற்கு அரசாணை (இருபதாண்டு) எண்.82 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந.2) துறை நாள் 23-12-2004ன்படியும், அரசாணை (2டி) எண்.36 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை நாள் 6-9-2005-ன்படியும், மா.ந.ம.தீ. எண்.323 நாள் 30-1-2003-ன் படியும், மா.ந.ம. தீ. எண்.204 நாள் 21-10-2005ன்படியும், மின்சார எரியூட்டு சாதனம் அமைத்து பராமரித்தல் பணிக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

பீளமேடு பொது நல நிறுவனத்தார் மின்சார எரியூட்டு சாதனம் அமைப்பதற்கான பணியினை சரிவர மேற்கொள்ளப்படாமல் பணி நடைபெறாமல் இருந்ததால், M/s. P.S.G. & Sons Charities நிறுவனத்தார் இது போன்ற பொதுப் பணிகளில் மேற்கொண்டு வருவதால் க.ச.எண்.302/2பி பீளமேடு மாநகராட்சி மயான நிலத்தில் 1.49 ஏக்கர் நிலத்தினை M/s P.S.G. & Sons Charities நிறுவனத்தாருக்கு குத்தகை அடிப்படையில் அதே அரசாணை (2டி) எண்.36 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை நாள் 6-9-2005 நிபந்தனைகளுக்குட்பட்டு ரூ.102 இலட்சம் செலவில் மின்சார எரியூட்டு சாதனம் அமைப்பதற்கு மா. ந. ம. தீர்மான எண். 122 நாள் 24-9-2007- ன்படி அனுமதி அளிக்கப்பட்டது. தற்போது M/s P.S.G. & Sons Charities நிறுவனத்தினர் 3-6-2008-ம் தேதி கொடுத்துள்ள கடிதத்தில்,

அரசாணை (2டி) எண்.36 நகராட்சி நிாவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை நாள் 6-9-2005ன்படி கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனை எண்.21ல் நிர்வாகக்குழு (Administrative Committee) வில் மாற்றம் செய்து கேட்டுள்ளார்கள்.

| வ.எண். | பொறுப்பு | G.O.36 நாள் 6-9-2005ன்படி | P.S.G. & Sons Charities கேட்டுள்ளபடி |
|---|---|---|---|
| 1. | தலைவர் | எரிவாயு மயான அறக்கட்டளை | எரிவாயு மயான அறக்கட்டளை |
| 2. | துணைத்தலைவர் | மாநகராட்சி மேயர் | மாநகராட்சி மேயர் |
| 3. | செயலாளர் | மாநகராட்சி ஆணையர் | Nominee from PSG |
| 4. | செயல் உறுப்பினர் | நகர் நல அலுவலர் | மாநகராட்சி ஆணையர் |
| 5. | உறுப்பினர்கள் | மாநகராட்சி பொறியாளர் | Nominee from PSG |
| | | மாநகராட்சி நகர அமைப்பு அலுவலர் | Nominee from PSG |
| | | மாநகராட்சி துணைத்தலைவர் | Nominee from PSG |
| | | எரிவாயு மயான அறக்கட்டளை செயலர் | Nominee from PSG |
| | | எரிவாயு மயானம் அமைந்த இடத்தின் மாநகராட்சி நகர் மன்ற உறுப்பினர் | Nominee from PSG |

நிர்வாகம் சிறப்பாக நடக்கவும், P.S.G. & Sons Charities நிாவாகக் குழுவை மாற்றி அமைக்க கேட்டுக் கொண்டதாலும்,

| வரிசை எண் | பொறுப்பு | |
|---|---|---|
| 1. | தலைவர் | எரிவாயு மயான அறக்கட்டளை |
| 2. | துணைத்தலைவர் | மாநகராட்சி மேயர் |
| 3. | செயலாளர் | Nominee from P.S.G. |
| 4. | செயல் உறுப்பினர் | மாநகராட்சி ஆணையாளர் |

இவா்களுடன் ஐந்து உறுப்பினா்கள் Nominee from P.S.G., மேலும் மாநகராட்சி துணை மேயா் மற்றும் எரிவாயு மயானம் அமைந்த இடத்தின் மாநகராட்சி மாமன்ற உறுப்பினா் ஆகிய இருவரையும் உறுப்பினா்களாக சோ்த்து நிா்வாகக் குழு (Administrative Committee) அமைக்க அரசை கேட்டுக் கொள்வது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -

மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். ந.க. எண்.12252/07/எச்2(வ)

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் : 116 நாள் : 17.06.08</u>**

அரசு ஆணைகளில் தெரிவித்துள்ளவாறு அமைக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வரும் நிா்வாகக் குழுவில் தற்போது அங்கம் வகிக்கும் உறுப்பினா்களைக் கொண்டு நிா்வாகக் குழுவினை தொடா்ந்து செயல்படுத்த தீா்மானிக்கப்பட்டது. பணிகளை துரிதமாக துவங்குமாறு M/s. P.S.G & Sons Charities நிறுவனத்தினரை வலியுறுத்தவும் தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 16

பொருள்- கோயம்புத்தூா் மாநகராட்சி – மயான உதவியாளா் -புதிய பணியிடங்கள் உருவாக்குதல் - அரசு அனுமதி கோருதல் - மாமன்ற ஒப்புதல்-தொடா்பாக

----------

நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளால் பராமரிக்கப்பட்டு வரும் மயானங்களில், மயானப் பணிபுரியும் வெட்டியான் என்றழைக்கப்படும் பணியாளா்கள் இனிமேல் மயான உதவியாளா்கள் என்று அழைக்கப்படுவாா்கள் என்றும், இப்பணியாளா்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டு, முறையான காலமுறை ஊதியத்திற்கு கொண்டு வரப்படுவாா்கள் என்றும் மாண்புமிகு ஊரக வளா்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சா் அவா்களால் 2007-08 ம் ஆண்டு வரவு-செலவு குறித்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் ஊரக வளா்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறைக்கான மானியக் கோரிக்கையின்போது அறிவிப்பு செய்யப்பட்டது.

கோயம்புத்தூா் மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள மயானங்களில் உரிமம் பெற்ற மயான வெட்டியான்கள் எவரும் இல்லை. இம்மாநகராட்சியில் கிழக்கு மண்டலத்தில் 11 மயானங்களும், மேற்கு மண்டலத்தில் 5 மயானங்களும், தெற்கு மண்டலத்தில் 6 மயானங்களும், வடக்கு மண்டலத்தில் 8 மயானங்களும் மொத்தம் 30 மயானங்கள் செயல்பட்டு வருகின்றன.

### <u>கிழக்கு மண்டலம்</u>

| வ.எண் | வாா்டு எண் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | 4 | வசந்தா நகா், நீலிக்கோனாம்பாளையம் |
| 2 | 5 | இருகூா் ரோடு |
| 3 | 6 | திருச்சி ரோடு |
| 4 | 6 | பட்டணம் இட்டேரி ரோடு |
| 5 | 7 | கள்ளிமடை |
| 6 | 9 | ராமானுஜம் நகா், நீலிக்கோனாம்பாளையம் |
| 7 | 11 | வரதராஜபுரம் மெயின் ரோடு, (உப்பிலிபாளையம்) |
| 8 | 14 | உடையாம்பாளையம் |
| 9 | 15 | சௌரிபாளையம் |
| 10 | 16 | சௌரிபாளையம் மெயின் ரோடு |
| 11 | 19 | அவிநாசி ரோடு |

## மேற்கு மண்டலம்

| வ.எண் | வார்டு எண் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | 56 | சொக்கம்புதூர் |
| 2 | 57 | பனைமரத்தூர் |
| 3 | 58 | சீரநாய்க்கன்பாளையம் |
| 4 | 59 | மருதமலை மெயின் ரோடு, பாப்பநாய்க்கன்புதூர் |
| 5 | 60 | திலகர் வீதி |

## தெற்கு மண்டலம்

| வ.எண் | வார்டு எண் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | 12 | நஞ்சுண்டாபுரம் மெயின் ரோடு |
| 2 | 12 | நஞ்சுண்டாபுரம் பத்ரகாளியம்மன் வீதி |
| 3 | 25 | புலியகுளம் மெயின் ரோடு |
| 4 | 42 | சுண்டக்காமுத்தூர் ரோடு |
| 5 | 54 | கள்ளாமேடு |
| 6 | 54 | ஆத்துப்பாலம் |

## வடக்கு மண்டலம்

| வ.எண் | வார்டு எண் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | 2 | விளாங்குறிச்சி ரோடு |
| 2 | 18 | தனலட்சுமி நகர் |
| 3 | 30 | சத்தி மெயின் ரோடு, சாஸ்திரி நகர் அருகில் |
| 4 | 66 | சங்கனூர் ரோடு |
| 5 | 70 | சின்னசாமி நகர் |
| 6 | 71 | ஜெயப்பிரகாஷ் நகர் |
| 7 | 72 | ராமகிருஷ்ணாபுரம் |
| 8 | 72 | மணியகாரம்பாளையம் |

மேற்படி மயானங்களுக்கு வரும் சடலங்களை சடங்கு செய்து எரிக்கவோ, புதைக்கவோ செய்யும் வேலைகளைச் செய்ய ஒரு மயானத்திற்கு தலா 1 மயான உதவியாளர்கள் வீதம் மயான உதவியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

தற்சமயம் கோயம்புத்தூர் மாநகராட்சியில் காலியாக உள்ள 103 துப்புரவுப் பணியாளர் பணியிடங்களில் 30 பணியிடங்களைக் கொண்டு மயான உதவியாளர் என்ற புதிய பணியிடத்தினை ரூ. 2550-55-2660-60-3200 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் இம்மாநகராட்சிக்கென உருவாக்க அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையாளர் மூலமாக அரசுக்கு பிரேரனை அனுப்ப மாமன்ற அனுமதி கோரலாம். மன்றப்பொருள் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 7429/ 2008 /எம்.சி. 3

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 117 நாள் : 17.06.08**

மாநகராட்சிக்கென அனுமதிக்கப்பட்ட துப்புரவுப் பணியாளர் பணியிடங்களைக் கொண்டு மயான உதவியாளர் பணியிடங்களை ஏற்படுத்துவதற்குப் பதிலாக கோவை மாநகராட்சிக்கென 30 மயான உதவியாளர் பணியிடங்களை தனியாக தோற்றுவிக்க அரசுக்கு பிரேரனை அனுப்பலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 17**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற உறுப்பினர்கள் - பிற உள்ளாட்சி அமைப்புகளின் திட்டங்களை நேரில் கண்டறிதல்- நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி –விமான வழிப்பயணம் மேற்கொண்டது – அரசின் பின்னேற்பு கோருதல்- மாமன்ற அனுமதி தொடர்பாக.

பார்வை – 1. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 65937/ 07/ மாந அ4 நாள் 14.12.2007

2. கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 10801/ 2007 /எம்சி.8 நாள் 18.12.2007

3. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண் 65937/ 07/ JNN1 நாள் 10.3.2008

-----------

பார்வை 1-ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் கடிதத்தின்படி, கோயம்புத்தூர் மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர், துணை மேயர், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆணையர், துணை ஆணையர் உள்பட அலுவலர்கள் நான்கு குழுக்களாக இந்தியாவின் பிற மாநகரங்களில் செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மை, பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் இதர திட்ட செயல்பாடுகளை 17.12.2007 முதல் 30.12.2007 வரை நேரில் கண்டறிந்து வர அனுமதி வழங்கப்பட்டு, செலவினத்தை மாநகராட்சி நிதியிலிருந்து செலவிடவும் அனுமதி அளிக்கப்பட்டது.

மேற்படி செயல்முறைகள் கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்பட்டு, மாநகர மன்ற தீர்மானம் எண் 252 நாள் 21.01.2008-ன்படி பயணங்களுக்கு உண்டாகும் செலவினத்தை மாநகராட்சி நிதியிலிருந்து செலவிடவும், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் III-ன் நிதி அல்லது ஜவஹர்லால் நேரு தேசிய நகர புனரமைப்புத் திட்ட நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையரைக் கோரலாம் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி, மேற்படி பயணம் சென்றுவர உண்டான செலவினங்களை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் III-ன் நிதி அல்லது ஜவஹர்லால் நேரு தேசிய நகர புனரமைப்புத் திட்ட நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ள அனுமதி கோரிய கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஈடுசெய்து கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் காணும் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை கடிதத்தின்படி, வணக்கத்திற்குரிய மேயர், துணை மேயர், வார்டுக்குழுத் தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள் உள்ளிட்ட 67 மாமன்ற உறுப்பினர்களும், இவர்களை ஒருங்கிணைத்து அழைத்துச் சென்றுவர ஆணையர், துணை ஆணையர் உள்ளிட்ட 20 அலுவலர்களும் 3 குழுக்களாக பயணம் சென்றுவர அனுமதி அளிக்கப்பட்டு, 23.12.2007 முதல் 28.12.2007 வரை பயணம் மேற்கொண்டு பிற மாநகராட்சிகளின் செயல்பாடுகளை கண்டறிந்து வந்தனர்.

மேற்படி பயணம் அவசர அவசியம் கருதியும், கால விரயத்தை தவிர்க்கும் பொருட்டும் விமானம் மூலம் மேற்கொள்ளப்பட்டது. வணக்கத்திற்குரிய மேயர், துணை மேயர், வார்டுக்குழுத் தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள் உள்ளிட்ட 67 மாமன்ற உறுப்பினர்களும், இவர்களுடன் ஒருங்கிணைத்துச் சென்றுவந்த 20 அலுவலர்களும் விமான வழிப்பயணம் சென்று வந்ததற்கு அரசின் பின்னேற்பு பெறவேண்டி அரசுக்கு அனுப்ப மாமன்ற ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண் 10801 /07/ எம்சி.8

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 118 நாள் : 17.06.08</u>

வணக்கத்திற்குரிய மேயர், துணை மேயர், வார்டு குழுத் தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள் உள்ளிட்ட 67 மாமன்ற உறுப்பினர்களும், ஆணையர், துணை ஆணையர் உள்ளிட்ட 20 அலுவலர்களும் பயணம் சென்றுவர விமான வழிப்பயணம் மேற்கொண்ட செலவினம் மற்றும் தங்குமிடம் செலவினம் ரூ. 24,43,771/ -ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது.

அவசர அவசியம் கருதியும், காலவிரயம் தவிர்க்கும் பொருட்டும் விமான வழியாக பயணம் மேற்கொண்டமைக்கு அரசினரின் பின்னேற்பு கோரவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 18

பொருள் :- தமிழ்நாடு சுகாதார முறைத் திட்டம் - அவசர மேலாண்மை மருத்துவ சிகிச்சை பணிகள் நிறுவுதல் - பல்வேறு வகையான அவசர நோயாளிகள், விபத்தில் பலியாகுதல் - அவசர மருத்துவ சிகிச்சை மேலாண்மை ஆராய்ச்சி நிலையம், ஹைதராபாத் மூலம் பணிகள் மேற்கொள்ளுவது - 20 ஆம்புலன்ஸ் வாங்கி வழங்குவது - தொடர்பாக.

---

அரசு ஆணை எண்.137. சுகாதாரம் மற்றும் குடும்பநலம் (EAP 1/1) துறை நாள்.05.05.2008-ல் சாலை விபத்துகள், தற்கொலை, கொலை குற்றம் போன்ற நிகழ்வுகளில் உயிர்காப்பதற்கு உடனடி மருத்துவ சிசிக்சை முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் மருத்துவ பணிக்கு ஆம்புலன்ஸ் வசதி மருத்துவ கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனையுடன் இணைந்து 24 மணி நேரமும் செயல்பட்டால் சாலை விபத்துகள், கர்ப்பிணி தாய்மார்கள், அவசர நோயாளிகள், பிரசவ வலிதாய்மார்கள், தற்கொலை போன்ற விலைமதிப்புள்ள உயிர்களை காப்பாற்ற முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மேற்காண் அரசு ஆணையில் தமிழ்நாடு முழுவதும் ஒருங்கிணைந்த அவசர மருத்துவ சிகிச்சை மேலாண்மை பணியை அவசர சிகிச்சை மேலாண்மை ஆராய்ச்சி நிலையம் ஹைதராபாத் மூலம் செயல்படுத்துவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) தமிழ்நாடு அரசு மூலம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், மாநகராட்சி பகுதியில் உள்ள மக்களுக்கு அவசர மருத்துவ சிகிச்சை மேலாண்மை பணிகள் மூலம் ஆம்புலன்ஸ் வசதி ஏற்படுத்துவதற்கு மாநகராட்சி நிதி மூலம் ஆம்புலன்ஸ் வாங்கி அவசர மருத்துவசிகிச்சை மேலாண்மை ஆராய்ச்சி நிலையம் ஹைதராபாத் நிறுவனத்தின் மூலம் பொது மக்களுக்கு அவசர மருத்துவ வசதிகள் அளிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்கள்.

இந்த, ஆம்புலன்ஸ் வாகனங்களுக்கு எரிபொருள், பராமரிப்பு செலவு ஆகியவை மேற்காண் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு மாநகராட்சி பகுதி மக்களுக்கு இலவசமாக ஆம்புலன்ஸ் வசதி அளிக்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

சிறப்பு செயலாளர், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை மற்றும் திட்ட இயக்குநர் சுகாதார முறைத் திட்டம், சென்னை அவர்களின் நேர்முக கடிதம் எண். 2216/A1/2008. 27.05.2008- ல் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 20 ஆம்புலன்ஸ் வாகனம் தேவைப்படுவதால் கீழ்க்கண்ட வகை வாகனங்கள் மாநகராட்சி நிதி மூலம் வாங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மேம்படுத்தப்பட்ட உயிர் காக்கும் உபகரணங்கள் பொருத்தப்பட்ட ஆம்புலன்ஸ் வாகனம் ஒன்றின் விலை ரூ.17.50 ல ட்சம் -5 எண்ணிக்கை | : | ரூ.87.50 லட்சம் |
| அடிப்படை உயிர் காக்கும் உபகரணங்கள் பொருத்தப்பட்ட ஆம்புலன்ஸ் ஒன்றின் விலை ரூ.11.50 லட்சம் - 15 எண்ணிக்கை | : | ரூ.172.50 லட்சம் |
| | | ரூ.260.00 லட்சம் |
| மொத்தம் | | ரூ.2.60 கோடி |

மேற்காண் 20 ஆம்புலன்ஸ் வாகனங்கள் நல்ல தரமுள்ளதாகவும், சிறப்பு அம்சங்களுடன் தமிழ்நாடு மருத்துவ பணி கழகம், எக்மோர், சென்னை மூலம் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் ரூ.2.60 கோடிக்கு காசோலை நிர்வாக இயக்குனர் , தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் சென்னைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளார்கள்.

மேலும் 20 வாகனங்களின் பராமரிப்பு செலவு, எரிபொருட்கள் செலவு ஆகிய தமிழ்நாடு அரசு ஏற்பாட்டின்படி அவசர மருத்துவ சிகிச்சை மேலாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் செய்து மாநகராட்சி பகுதியில் உள்ள பொது மக்களுக்கு இலவசமாக ஆம்புலன்ஸ் வசதி அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, 20 ஆம்புலன்ஸ் வாகனங்கள் ரூ.2.60 கோடி செலவில் மாநகராட்சி நிதியில் இருந்து வாங்குவதற்கு மாமன்ற ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- மாமன்றம் முடிவு செய்யலாம் ந.க.எண். 7603 /2008/ எம். இ.1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 119 நாள் : 17.06.08</u>

மேம்படுத்தப்பட்ட உயிர் காக்கும் உபகரணங்கள் பொருத்தப்பட்ட ஆம்புலன்ஸ் வாகனம் ஒன்றும், அடிப்படை உயிர்காக்கும் உபகரணங்கள் பொருத்தப்பட்ட ஆம்புலன்ஸ் வாகனங்கள் மூன்றும் வாங்க அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 19

கோயம்புத்தூர் மாநகராட்சியின், பல பகுதிகள் போதிய மழைநீர் வடிகால் வசதி இல்லாமலும், மாநகராட்சியில் உள்ள முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவுகளில் முழுமையாக மழைநீர் வடிகால் வசதி இல்லாமல் இருப்பதால் மழை காலங்களில் நகரின் பல பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்து கடுமையான போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு பொது மக்களுக்கு இடையூறாக இருந்து வருகிறது. எனவே, தற்போது முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவுகள் உள்ளிட்ட மாநகரின் அனைத்து பகுதிகளிலும் தற்போதைய மக்கள் தொகைக்கேற்ப ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மேம்பாட்டு புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால் திட்டத்தினை செயல்படுத்திட முடிவு செய்யப்பட்டு விரிவான திட்டம் தயாரித்து அளித்திட மாமன்றம் தீர்மான எண். 213 நாள். 29–12–06 ன் படி இப்பணியினை தி/ள். மோட் மேக் டொனால்டு அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது.

<u>இத்திட்டத்தின் தேவை</u>

- தற்போதைய நிலவரப்படி75 சதவீத சாலைகள், மழைநீர் வடிகால் இல்லாமல் இருக்கிறது.

- ஒட்டு மொத்த மாநகராட்சியின் நிலப்பரப்பின் தன்மையை ஆராய்ந்து மொத்த மாநகராட்சிக்காக திட்டம் தயாரிக்கப்படாமல் இருந்து வந்தது. இக்குறையை தீர்க்க இத்திட்டம் தேவைப்படுகிறது.

- மழைகாலங்களில் தண்ணீர் சாலைகளில் ஓடுவதால், சாலையின் மேல்பரப்பு சேதமடைந்து, ஒவ்வொரு மழை முடிந்த பிறகும் சாலைகளை மேம்படுத்த வேண்டியுள்ளதால், மழைநீர் வடிகால் அமைப்பு அவசியமாக உள்ளது.

- மழை காலங்களில் மழைநீர் தேங்கி நீர் சம்பந்தமான நோய்கள் வராமல் தடுக்க இத்திட்டம் தேவைப்படுகிறது.

முதற்கட்டமாக மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து சாலைகள் மற்றும் ஓடைகளின் தற்போதைய அளவை (2007 ஏப்ரலில் உள்ளபடி) கணக்கில் கொண்டு வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் தயாரிப்பில் ஒரு பகுதியாக, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி பொறியாளர்களை சந்தித்து அவர்களுடைய கருத்துக்கள் திட்ட தயாரிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

திட்டத்திற்கு அடிப்படையான மழை பெய்யும் அளவை கணக்கிட, சென்னையிலுள்ள வானிலை ஆராய்ச்சி மையத்திலிருந்து 26 வருடத்திய மழை அளவையும், கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகத்தில் இருந்து 37 வருடத்திய மழை பெய்த அளவையும் பெற்று CPHEEO வழிகாட்டுதலை அடிப்படையாகக் கொண்டு வருங்கால மழை அளவு கணக்கிடப்பட்டது.

- ❖ கடந்த 38 வருடத்தில் 4615 தடவை 3 மிமீ க்கு அதிகமாக மழை பெய்துள்ளது.
- ❖ 1969 ல் இருந்து 2007 ம் ஆண்டுவரையான காலகட்டத்தில் ஒரே நாளில் பெய்த அதிகபட்ச மழை அளவு 193 மிமீ (டிசம்பர் 1972) இதே காலகட்டத்தில் ஒரே நாளில் பெய்த இரண்டாம் அதிகபட்ச மழை அளவு 153 மிமீ (அக்டோபர் 1997).
- ❖ 1969 ம் வருடத்திலிருந்து 2007 ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் அதிகபட்ச மழை அடர்த்தி 76 மிமீ ஒரு மணி நேரத்திற்கு.

<u>மழைநீர் வடிகால் திட்டத்தின் சிறப்பம்சங்கள்</u>

- ❖ வடிவமைக்கப்பட்ட மழைநீர் வடிகால் கட்டமைப்பின் நீளம் – 2281 கிமீ.
- ❖ மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து சாலைகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு, வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ❖ எங்கெல்லாம் மழைநீர் வடிகால் 1 மீட்டருக்கும் மேல் ஆழமாக உள்ளதோ, அங்கெல்லாம் வடிகாலை மூடிவிடுவதற்கு ஏற்றார் போல் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ❖ அவ்வாறு மூடும் பட்சத்தில், ஒவ்வொரு 5 மீட்டர் இடைவெளியிலும் வடிகாலின் உள்ளே இறங்கி தூய்மை படுத்துவதற்கு வழி செய்யுமாறு இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ❖ ஒவ்வொரு 5 மீ இடைவெளியிலும் மழைத்தண்ணீர் மழைநீர் வடிகாலுக்குள் செல்வதற்காக வழி இருக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ❖ குறைந்த பட்ச மழைநீர் வடிகால் அளவு 0.3 மீட்டர் அகலமும் 0.3 மீட்டர் ஆழமும் அமையுமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.
- ❖ தாழ்வான பகுதியிலுள்ள குறுக்கு சந்து, சிறிய தெரு மற்றும் முட்டுச்சந்து மழைநீரானது, உயரமான பகுதியான அருகிலுள்ள பெரிய தெருக்களில் சேருமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், எல்லா தெருக்களின் மழைநீரும் அருகிலுள்ள ஓடைகளை சென்றடையுமாறு வசதி செய்யப்பட்டுள்ளது.
- ❖ அனைத்து சாலைகளில் தேங்கும் மழை தண்ணீர் அருகில் உள்ள ஓடைக்கும், அந்த ஓடையின் நீர் குளத்திற்கும் சென்று கலக்குமாறு இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
- ❖ 0.6 மீட்டருக்கு அதிக அகலமான வடிகால்களில், குறைந்த அளவு மழைநீரோ அல்லது மற்ற தண்ணீர் வந்தால் கூட ஓடுவதற்கு வசதியாக சிறிய தாழ்வான பகுதி வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ❖ அனைத்து மழைநீர் வடிகால்களும் கான்கிரீட்டால் கட்டப்படுமாறு வடிவமைக்கப் பட்டுள்ளது. அதற்கான மதிப்பீடும் செய்யப்பட்டுள்ளது.

<u>ஓடைகள் மேம்படுத்துதல்</u>

மாநகராட்சியின் மத்தியில் ஓடும் சங்கனூர் பள்ளத்தினை புதுப்பிக்கவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சங்கனூர் பள்ளத்தின் போதிய அகலம் உள்ள இடத்தில் கரையின் இரண்டு புறத்திலும் சாலைகள் அமைத்திடவும், சிறு சிறு பூங்காக்கள் அமைத்து வண்ண விளக்குகளால் அழகு படுத்திடவும், பெஞ்சுகள் அமைத்து முதியோர் அமர்ந்திடும் வகையிலும் திட்ட அறிக்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மற்றும் சிறு ஓடைகளான கணபதி – சிங்காநல்லூர், விளாங்குறிச்சி, கோவில் மேடு மற்றும் கருப்பராயன் கோவில் ஓடைகளின் மேம்பாட்டு திட்டமும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

<u>திட்ட மதிப்பீடு</u>

**சாலையோர மழைநீர் வடிகால் கட்டமைப்பு – 505.24 கோடி**
**ஓடைகளை மேம்படுத்துதல் – 260.14 கோடி**

<u>திட்ட மதிப்பீட்டுத்தொகை நிதி பங்கீடு விபரம்</u>

| வ.எண் | நிதி பங்கீடு | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1. | மத்திய அரசு பங்கு நிதி 50 சதவீதம் | ரூ. 382. 69 |
| 2. | மாநில அரசு பங்கு நிதி 20 சதவீதம் | ரூ. 153. 08 |
| 3. | மாநகராட்சி பங்கு நிதி 30 சதவீதம் | ரூ. 229. 61 |
| | மொத்தம் | ரூ. 765. 38 |

மேற்படி திட்ட அறிக்கையினை, மாநகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்களின் பரிந்துரையுடன் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் மூலமாக மத்திய கண்காணிப்பு மற்றும் ஒப்புதல் அளிக்கும் குழுவின் ஒப்புதல் பெற்று செயல்படுத்தவும் மன்றத்தின் அனுமதி கோரப்பட்டு மேற்கண்ட நிதிப்பங்கீட்டில், மாநகராட்சியின் 30 சதவீதப் பங்குத் தொகையை செலவிட மாநகராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாததால் மேற்படி தொகையினை TUFIDCO நிறுவனத்திடம் கடனுதவி பெற்று திட்டத்தினை செயல்படுத்தவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது,

அலுவலகக் குறிப்பு:

1) தி/எ். மோட் மேக் டொனால்டு நிறுவனத்தால் சமர்பிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையினை மத்திய அரசின் ஒப்புதல் பெறுவதற்காக நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் TUFIDCO நிறுவனங்களுக்கு அனுப்ப ஒப்புதல் வழங்கலாம்.

2) மாநகராட்சியின் 30 % பங்குத் தொகையினை TUFIDCO நிறுவனத்திடம் கடன் பெற்று திட்டத்தினை செயல்படுத்த ஒப்புதல் வழங்கலாம்.

<u>ந.க. எண். 13088/2006/MD3/(JN3)</u>

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 120 நாள் : 17.06.08</u>

1. சாலையோர மழைநீர் வடிகால் மற்றும் இயற்கை வடிகால் மேம்படுத்தும் பணிக்கு தி/எ். மோட் மேக் டொனால்டு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையினை பதிவு செய்து மாநில அளவிலான கண்காணிப்புக்குழு மூலமாக மத்திய அரசின் ஒப்புதல் வழங்கும் மற்றும் வழிகாட்டுதல் குழுவின் ஒப்புதல் பெற தீர்மானிக்கப்பட்டது.

2. மேற்படி திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகையில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் மானிய பங்கு நிதியுடன் மாநகராட்சியின் 30 சதவிகித பங்குத் தொகையினை TUFIDCO நிறுவனத்திடம் கடனாகப் பெற்று திட்டத்தை செயல்படுத்த ஒப்புதல் அளிக்க தீர்மானிக்கப்பட்டது.

3. மேற்படி திட்ட மதிப்பீட்டுத் தொகை அதிகமாக இருப்பதாகவும், மதிப்பீட்டுத் தொகையினை குறைத்து செயல்படுத்த கருத்து தெரிவித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் தங்களது ஆட்சேபணையை பதிவு செய்தனர் .

4. ஓடைகளை மேம்படுத்துதல் திட்டத்தினால் ஓடைகளின் கரையோரங்களில் குடியிருந்து வரும் மக்கள் அப்புறப்படுத்தப்படுவார்கள் என்ற கருத்தை தெரிவித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் தங்களது ஆட்சேபணையை பதிவு செய்தனர்.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 20

பொருள் - குத்தகை – கோயமுத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் 2008-2009 ம் ஆண்டுக்கு ஏல இனம் எண்.34 குரு ஹோட்டல் அருகில் உள்ள வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் - உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு வழங்குவது தொடர்பாக.

---------

கோயமுத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனம் எண்.34 குரு ஹோட்டல் அருகில் உள்ள வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்துக்கு 27.05.08 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி கோரப்பட்டது. ஏலத்தில் 26 நபர்கள் கலந்து கொண்டனர். இதில் ஒருவரும் ஏலம் கோர முன் வரவில்லை. ஒப்பந்தபுள்ளிகள் ஐந்து பெறப்பட்டன. இதில் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.7,00,000/-த்தை திரு.எஸ்.மயில்சாமி, ஹோட்டல் லார்ட்ஸ் பார்க் நிறுவனத்தினர் கொடுத்துள்ளனர். இந்த இனத்திற்கு கடந்த 01.04.2008 முதல் துறை மூலம் வசூலிக்கப்பட்டு வருகிறது. நாளது வரை வசூல் ரூ 48,910/- இந்த இனத்திற்கு கடந்த ஆண்டு குத்தகை தொகை ரூ 9,00,000/- மூன்றாண்டு சராசரித் தொகை ரூ.4.88.333/- ஆகும்.

இவ்வினத்திற்கு தொடர்ந்து ஏலம் கோரும்பட்சத்தில் ஒருவரும் ஏலம் கோர முன் வரமாட்டார்கள் எனக்கருத வேண்டியுள்ளதாலும், துறை மூலம் கட்டணம் வசூலித்தால் பணியாளர்கள் சம்பளம் மற்றும் இரசீது புத்தகங்கள் அச்சிடும் செலவு ஏற்படும் நிலை உள்ளதாலும், இரண்டு மாதங்கள் கடந்து விட்ட நிலையில், உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளித் தொகையான ரூ. 7,00,000/- த்தினை அங்கீகரிக்க அவசர அவசியம் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிமம் ஒப்படை செய்யப்பட்டது.

எனவே மேற்படி இனத்தை ஒப்படை செய்ததற்கு மன்றத்தின் பின்னேற்புக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண் .11620/07/அ10

## மாநகர மன்ற தீர்மானம் எண் : 121 நாள் : 17.06.08

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள குரு ஹோட்டல் அருகில் உள்ள வாகன நிறுத்துமிடத்தில் பலஅடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த காலம் முடிவதற்குள், அதாவது 31.3.2009-க்கு முன்பாக , பலஅடுக்கு வாகன நிறுத்துமிட பணிகள் துவங்கும் பட்சத்தில் ஒப்பந்ததாரர் உடனடியாக இடத்தை மாநகராட்சி வசம் ஒப்படைக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

அவ்வாறு ஒப்படை செய்ய நேரும் பட்சத்தில் அவர் கோரியுள்ள ஏலத்தொகை விகிதாச்சார அடிப்படையில் மீதமுள்ள காலத்திற்கான தொகையினை திரும்ப வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 21**

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி - பொது சுகாதாரம் - வ.உ.சி உயிரியல் பூங்கா வேறு இடம் தேர்வு செய்வது குறித்து.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் வ.உ.சி உயிரியல் பூங்காவிற்கு வேறு இடம் தேர்வு செய்வது குறித்து மத்திய உயிரியல் பூங்காக்களின் ஆணையகம் (Central Zoo Authority ) அவர்களின் F.No .19-61 /92 CZA 244 (Vol II)M. Dated. 12.10.2004 கடிதத்தின்படி வ.உ.சி உயிரியல் பூங்காவை கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற தீர்மான எண்.178. நாள்.28.10.2004-ன்படி மேட்டுப்பாளையம் சாலையில் உரக்கிடங்கு பகுதிக்கு மாற்றி உயிரியல் பூங்காவை உருவாக்கலாம் என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் தற்போது அப்பகுதியில் முஸ்லீம் மயானம் , மின் மயானம் மற்றும் தமிழ்நாடு மின்வாரியத்தால் ஒரு துணை மின் நிலையம் ஏற்படுத்துவதாகவும், மேலும் மாநகராட்சி மூலம் செயல்படுத்த இருக்கும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகையால் இந்த இடத்தில் திறந்த வெளி உயிரியல் பூங்காவை அமைப்பது உகந்த சூழ்நிலையாக இருக்காது.

எனவே, வ.உ.சி. உயிரியல் பூங்காவிற்கு (Zoo) அரசுக்கு சொந்தமான இடம் தேர்வு செய்ய மாவட்ட வருவாய் அலுவலரிடம் கலந்து ஆலோசித்து 31.05.2008ம் தேதி ஆணையாளர், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் எட்டிமடை கிராமத்தில் க.ச.எண்.406ல் சுமார் 70 ஏக்கர் நிலம் கல்லாங்கொத்து புறம்போக்கு நிலம் பார்வையிடப்பட்டது. இந்த இடம் மலை அடிவாரத்தில் இயற்கை சூழ்நிலையில் அமைந்துள்ளதால் உயிரியல் பூங்கா அமைக்க உகந்ததாக இருக்கும்.

எனவே, மேற்படி க.ச.எண்.406 உள்ள புறம்போக்கு நிலத்தை வ.உ.சி. உயிரியல் பூங்கா அமைத்து பராமரிப்பதற்கு மேற்படி இடத்தை கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு நில உரிமை மாற்றம் (Land Alienation) செய்துதர மாவட்ட ஆட்சித் தலைவரை கேட்டுக் கொள்ள மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம். ந.க.எண் .27581/04/ எம்.இ.4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 122 நாள் : 17.06.08</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 22**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி - புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் - மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களும் 03.06.2008 முதல் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் இணைவதற்கு தொகை செலுத்துதல் - சம்பந்தமாக.

பார்வை: அரசு ஆணை எண் :174, நாள் 28.04.2008.

-------

பார்வையில் கானும் அரசு ஆணையில் இம்மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களையும் புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் இணைப்பதற்கு, வருடத்திற்கு ரூ.495/- வீதம் The Star Health and Allied Insurance Company Ltd., என்ற நிறுவனத்திற்கு செலுத்த உத்திரவிடப்பட்டுள்ளது.

இதற்காக இம்மாநகராட்சி அலுவலர்களின் மாத ஊதியத்திலிருந்து ரூ.25/-வீதம் (25x12 = 300) ஆண்டிற்கு ரூ.300/- ம் மீதம் உள்ள தொகை ரூ.195/-ம் மற்றும் சேவை கட்டணம் 12.5% மாநகராட்சி நிதியிலிருந்து செலுத்தவும் அரசு ஆணை நாள்.28.04.2008-ல் பத்தி எண். 6-ல் குறிப்பிட்பபட்டுள்ளது.

இம்மாநகராட்சியில் உள்ள மொத்த பணியிடங்கள் 4427. இதில் 664 பணியிடங்கள் தற்போது காலியாக உள்ளதால், பணிபுரியும் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 3763 ஆகும். இவர்களுக்கு வருடம் ரூ.195/- வீதம் இவ்வலுவலகத்திலிருந்து செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ.7,33,785/- ம் சேவை கட்டணம் ரூ. 2,32,835/- ம் உள்ளது.

மேற்படி தொகை ரூ.7,33,785/-ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து **The Star Health and Allied Insurance Company Ltd.,** என்ற நிறுவனத்திற்கு ஒவ்வொரு வருடமும் செலுத்தவும், இதற்கான சேவைக் கட்டணம் ( 3763 x 495 = 18,62,685 ) 12.5% ரூ.2,32,835/-ஐ செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண் 6354/08/B 16

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 123 நாள் : 17.06.08</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 23

பொருள் : பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி – தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணி விதிகள், 1996 – வகுப்பு II, பிரிவு I, இனம் (1) – உதவி செயற்பொறியாளர் (பிரதான அலுவலகம்) பணியிடம் - மாநகராட்சியிலுள்ள அனைத்து வாகனங்கள் பராமரித்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளை கவனிக்க உருவாக்கப்பட்டது - மேற்கண்ட பணியிடத்தை திரு.கோ.சரவணக்குமார், இளநிலைப்பொறியாளருக்கு (இயந்திரப்பொறியியல்) பதவி உயர்வு அளித்து நிரப்புதல் – மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண் 237 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை நாள் 26.09.1996.
2. அரசாணை (நிலை) எண் 139 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை நாள் 27.05.1997.
3. அரசாணை (நிலை) எண் 140 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 27.05.1997.
4. அரசாணை (நிலை) எண் 77 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந - 4) துறை நாள் 13.05.1998.
5. ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களது குறிப்பாணை ந.க.எண் 177769 / 2006 / எம்.சி 1 நாள் 22.12.2006.
6. ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களது செயல்முறைகள் ந.க.எண் 177769 / 2006 / எம்.சி 1 நாள் 14.08.2007.
7. திரு.கோ.சரவணக்குமார்,இளநிலைப்பொறியாளர் (இயந்திரப்பொறியியல்) நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு 12.05.2008 தேதியில் கொடுக்கப்பட்ட மனு.
8. நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்: 4298/2008/எப்4 நாள் 29.05.2008.

அரசாணை (நிலை) எண் 237 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை நாள் 26.09.1996-ல் இம்மாநிலத்திலுள்ள அனைத்து மாநகராட்சிகளிலுள்ள (சென்னை மாநகராட்சி நீங்கலாக) பணியாளர்களுக்கான புதிய பணி விதிகள் தோற்றுவிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வரசாணையில் தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோகப் பணியாளர்கள் பணியமைப்பு விதிகள், 1996 என்ற தலைப்பில் பணிவிதிகள் அமைக்கப்பட்டு சில நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசாணை (நிலை) எண் 139 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை நாள் 27.05.1997-ல் மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இரண்டு மாநகராட்சிகளின் பிரதான அலுவலக பொறியியல் பிரிவிற்கென ஒரு உதவி செயற் பொறியாளர் (பிரதான அலுவலகம்) என்ற பணியிடத்தை ரூ.8000-275-13500 என்ற ஊதிய விகிதத்தில் தோற்றுவித்து அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியிடம் அம்மாநகராட்சிகளில் உள்ள வாகனங்களை பராமரித்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை கவனித்துக் கொள்வதற்கென தோற்றுவிக்கப்பட்டதாகும். ஆனால் அவ்வரசாணையில் மேற்படி பணியிடத்தை எவ்வாறு நிரப்பப்பட வேண்டுமென எந்தவொரு தெளிவுரையும் வழங்கப்படவில்லை. அரசாணை (நிலை) எண் 77 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந-4) துறை நாள் 13.05.1998-ல் அப்பணியிடம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சியினை பொருத்த வரையில் மேற்படி உதவி செயற் பொறியாளர் (பிரதான அலுவலகம்) பணியிடம் தோற்றுவித்த நாள் முதல் இன்று வரை எவரேனும் ஒரு உதவி செயற் பொறியாளரைக் (வார்டு அலுவலகம்) கொண்டு சுழற்சி முறையில் பணியமர்த்தப்பட்டு வருகிறது. தற்சமயம் உதவி செயற்பொறியாளர் (பிரதான அலுவலகம்) பணியிடம் காலியாகவுள்ளது.

1996-ம் வருடத்திய தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் பணி விதிகளின் உட்பிரிவு (4)-ன் படி இளநிலைப்பொறியாளர்/உதவிப்பொறியாளர் பணியிடத்திலிருந்து உதவி செயற்பொறியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு அளிப்பதற்கு அடிப்படை தகுதியாக ஒரு இளநிலைப்பொறியாளர்/உதவிப்பொறியாளராக வார்டு அலுவலகத்தில் மூன்று ஆண்டுகளுக்கு குறையாமலும், மாநகராட்சியின் பிரதான அலுவலகத்தின் பொறியியல் பிரிவில் ஒரு ஆண்டுக்கு குறையாமலும் பணி புரிந்திருக்கவேண்டும். மேலும் 1996-ம் வருடத்திய தமிழ்நாடு மாநகராட்சிகள் பணி விதிகள் பகுதி I, விதி 2(அ)-ன் படி வகுப்பு II-ல் சேர்க்கப்பட்டுள்ள பணியிடங்களுக்கு மாநகராட்சி மாமன்றம் மூலம் நியமனம் செய்து அரசின் உறுதியாக்கம் பெறப்பட வேண்டும்.

அரசாணை (நிலை) எண் 140 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 27.05.1997-ல் தெரிவிக்கப்பட்ட தெளிவுரைகளின் அடிப்படையில், பார்வை 5-ல் கண்ட ஆணையரின் குறிப்பாணை ந.க.எண் 177769/2006/எம்.சி1 நாள் 22.12.2006-ல் திரு.கோ.சரவணக்குமாரின் பெயர் இம்மாநகராட்சியின் இளநிலைப் பொறியாளர் (இயந்திரப்பொறியியல்) பணியிடத்திற்கான பணிமூப்புப் பட்டியல் வெளியிடப்பட்டு, பின்னர் பார்வை 6-ல் கண்ட ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்:177769/2006/எம்.சி1 நாள் 14.08.2007-ல் அப்பணிமூப்புப் பட்டியல் இறுதி செய்து வெளியிடப்பட்டுள்ளது. அப்பணிமூப்புபட்டியலில் அவரது பெயர் மட்டுமே இடம் பெற்றுள்ளது. திரு.கோ.சரவணக்குமார், இளநிலைப்பொறியாளர் (இயந்திரப்பொறியியல்) இம்மாநகராட்சியின் வாகனங்களின் பராமரிப்பு பொறுப்பில் உள்ளதுடன் வெள்ளலூர் குப்பைங்கிடங்கின் பராமரிப்பு பொறுப்பில் அமர்த்தப்பட்டு, திடக்கழிவு மேலாண்மைத் திட்டப்பணிகளை கவனித்து வருகிறார். மேலும் திடக்கழிவு மேலாண்மைத்தொடர்பான பல பயிற்சி வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் பிரதிநிதியாகவும் கலந்து கொண்டுள்ளார். 1996-ம் வருடத்திய தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் பணி விதிகளின் உட்பிரிவு (4)-ன் படி இளநிலைப் பொறியாளராக வார்டு அலுவலகத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக பணி புரிந்தும் மற்றும் மாநகராட்சியின் பிரதான அலுவலகத்தின் பொறியியல் பிரிவில் ஒரு ஆண்டுக்கு மேலாக தொடர்ந்து பணி புரிந்து வருவதாலும் பார்வை 2-ல் கண்ட அரசாணையில் தோற்றுவிக்கப்பட்ட உதவி செயற்பொறியாளர் (பிரதான அலுவலகம்) பணியிடத்திற்கு பதவி உயர்வு பெறுவதற்கான முழு தகுதியினை பெற்றுள்ளார்.

பார்வை 7-ல் கண்ட திரு.கோ.சரவணக்குமார், இளநிலைப்பொறியாளர் (இயந்திரப்பொறியியல்), நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் கொடுத்த மனுவில் தன்னை உதவி செயற்பொறியாளர் (பிரதான அலுவலகம்) பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்குமாறு கோரியுள்ளார். இதனை பரிசீலித்த நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள், பார்வை 8-ல் கண்ட ந.க.எண்: 4298/2008/எப் 4 நாள் 29.05.2008-ல் கோயம்புத்தூர் மாநகராட்சியிலுள்ள அனைத்து வாகனங்கள் பராமரித்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளை கவனிப்பதற்கென தோற்றுவிக்கப்பட்ட உதவி செயற்பொறியாளர் (பிரதான அலுவலகம்) பணியிடத்தினை இம்மாநகராட்சியின் பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவில் இயந்திரப் பொறியியலில் தேர்ச்சி பெற்று மேற்கூறிய தகுதியினை பெற்றுள்ள திரு.கோ.சரவணக்குமார், இளநிலைப்பொறியாளரை (இயந்திரப்பொறியியல்) பதவி உயர்வு அளித்து நிரப்பிக்கொள்ளுமாறு கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரை கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே கோயம்புத்தூர் மாநகராட்சியிலுள்ள அனைத்து வாகனங்கள் பராமரித்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளை கவனிப்பதற்கென தோற்றுவிக்கப்பட்ட உதவி செயற்பொறியாளர் (பிரதான அலுவலகம்) பணியிடத்திற்கு இம்மாநகராட்சியின் பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவில் பணிபுரியும் திரு.கோ.சரவணக்குமார், இளநிலைப்பொறியாளருக்கு (இயந்திரப்பொறியியல்) பதவி உயர்வு வழங்கி நியமனம் செய்யவும்; அதன் பின்னர் அரசினரின் உறுதியாக்கம் பெறவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் : 177769/2006/எம்.சி 1

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 124 நாள் : 17.06.08**

உயர்நீதி மன்றத்தில் தடை உத்திரவு பெறப்பட்டுள்ளதாக தொலையச்சு (Fax) மூலம் தகவல் பெறப்பட்டுள்ளது. எனவே உயர்நீதி மன்ற வழக்கறிஞரின் சட்ட ஆலோசனை பெற்று மேல் நடவடிக்கை தொடரலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 24

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்தும் பணிக்கு ரூ. 96.51 கோடி தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கைக்கு மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் 'ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழு' கடந்த 02.02.2007–ல் அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி திட்டத்திற்கு அரசாணை எண் 160 (டி) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந.– II) துறை நாள் 17.04.2007–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் வழிகாட்டுதல்களின் படி பகுதி– I ஆக முதற்கட்ட குப்பை சேகரிப்பு (Primary Collection) பணிகள் அனைத்தையும் இம்மாநகராட்சியால் செயல்படுத்தவும், பகுதி–II ஆக நவீன குப்பை மாற்று நிலையங்கள் நிறுவுதல், இரண்டாம் கட்ட குப்பை அகற்றும் பணிகள் மேற்கொள்ளுதல், நவீன உரக்கிடங்கு நிறுவுதல் மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்காத வண்ணம் சுகாதார கட்டமைப்பு நிறுவுதல் (Modern Transfer Station, Secondary Transportation, Compost Plant & Sanitary Land Fill) போன்ற பணிகளை தனியார் பங்களிப்புடன் (Public Private Partnership Arrangement) செயல்படுத்த மாநகர மன்ற தீர்மான எண் 15 நாள் 31.05.2007–ல் தீர்மானிக்கப்பபட்டுள்ளது. அரசாணை எண் 613 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந.– II) துறை நாள் 20.12.2007–ல் மேற்படி திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை தனியார் பங்களிப்புடன் செயல்படுத்த திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பகுதி–II–ல் குறிப்பிட்டுள்ள நவீன குப்பை மாற்று நிலையங்கள் நிறுவி பராமரித்தல், இரண்டாம் கட்ட குப்பை அகற்றும் பணிகள் மேற்கொள்ளுதல், நவீன உரக்கிடங்கு நிறுவி பராமரித்தல் மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்காத வண்ணம் சுகாதார கட்டமைப்பு நிறுவி பராமரித்தல் போன்ற பணிகளை தனியார் பங்களிப்புடன் (Public Private Partnership Arrangement) செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அனுகூலமான ஒப்பந்ததாரர் தி/ள் யு.பி.எல் – பி.இ.ஐ.எல் (கூட்டு ஸ்தாபனம்), மும்பை நிறுவனத்தினரை தேர்வு செய்து பகுதி–IIன் கீழ் செய்யவிருக்கும் பணிகளை அந்நிறுவனத்திற்கு ஒப்படைக்கலாம் என மாநகர மன்ற தீர்மான எண் 189 நாள் 30.10.2007–ல் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஏற்கனவே மத்திய நகர்ப்புற அமைச்சகம் அனுமதித்துள்ளபடி அனுகூலமான ஒப்பந்ததாரருக்கு இத்திட்டத்திற்கு தேவைப்படும் மாநகராட்சிக்கு சொந்தமான சுமார் 7,57,818.51 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலங்களை ஆண்டொன்றுக்கு ஒரு சதுரமீட்டருக்கு ரூ.1.00 (ஒரு ரூபாய் மட்டும்) வீதம் நிலக் குத்தகை வாடகை தொகை (Annual Land Lease Rent) யினை நிர்ணயம் செய்து ஒப்படை செய்வதற்கு அரசினரின் அனுமதி கோரப்பட்டது. அரசாணை எண் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந.– II) துறை நாள் 09.05.2008–ல் மேற்படி மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களை அனுகூலமான ஒப்பந்ததாரர் தி/ள் யு.பி.எல் – பி.இ.ஐ.எல் (கூட்டு ஸ்தாபனம்), மும்பை நிறுவனத்தாரிடம் 20 ஆண்டுகளுக்கு நிலக் குத்தகை வாடகை தொகை அடிப்படையில் ஒப்படை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அரசாணை எண் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந.–II) துறை நாள் 09.05.2008–னை பதிவு செய்யலாம்.

ந.க.எண்: 13087/2006/(எம்.டி3)ஜே.என்.3

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 125 நாள் : 17.06.08</u>

அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (மா.ந.II ) நாள் 09.05.2008-ஐப் பதிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 25

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்டதும், பொதுபணித்துறைக்கு சொந்தமான கீழ்கண்ட எட்டு(8) நீர்நிலைகளை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேம்படுத்த மாமன்ற தீர்மான எண் 230 நாள் 29.12.06 ல் மெசர்ஸ். ஆஃப்ரோ நிறுவனம் பெங்களூர், அவர்களின் மூலம் விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடு ரூ 127. 05 கோடி செலவில் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டது.

1) கிருஷ்ணாம்பதி குளம்,
2) செல்வாம் பதி குளம்
3) குமாரசாமி / முத்தண்ணன் குளம்
4) பெரிய குளம்
5) நரசாம்பதி குளம்
6) செல்வசிந்தாமணி குளம்
7) வாளாங்குளம்
8) சிங்காநல்லூர் குளம்

நீர்நிலைகளை தூர் வாரி, கழிவுநீர் கலப்பதனை தடுத்து, கரைகளை பலப்படுத்தி, பூங்காக்கள் அமைத்து மழைநீர் சேகரித்து உட்கட்டமைப்புகளை மேற்கொள்வதன் மூலம் நிலத்தடி நீர்மட்டத்தினை பராமரித்து பாதுகாத்திட மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பணிகளை மேற்கொள்ள மாநகராட்சி மொத்த மதிப்பீட்டு தொகையில் 30 சதவீதம் பங்களிப்பு செய்து பணியினை மேற்கொள்ள பொதுப்பணி துறையினர் வசம் உள்ள நீர்நிலைகளை மாநகராட்சி வசம் ஒப்படைக்க கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதன் பேரில் அரசு ஆணை (ப) எண் 240 பொதுப்பணித் (க்யூ 1) துறை நாள் 22.05.08 ல் மேற்கண்ட குளங்களை மாநகராட்சி வசம் ஒரு முறை செயலாக்கம் ( One time Operation ) மூலம் மேம்படுத்த பொதுபணித்துறை கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய வெளியிடப்பட்டுள்ள அரசு ஆணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மாமன்றம் அரசு ஆணையினை பதிவுசெய்யலாம்

ந.க. எண் 13090 / 06 / JN 3

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 126 நாள் : 17.06.08</u>

அரசு ஆணை (ப) எண் 240 பொதுப்பணித்துறை (க்யு 1) நாள் 22.05.2008-ஐ பதிவு செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

கோயம்புத்தூர் மாநகராட்சி வசம் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான 8 குளங்களை முழுமையாக ஒப்படைக்க அரசினை வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது. மேலும் குளங்களை முழுமையாக ஒப்படைக்கப்பட்ட பின்னர் திட்டத்தினை செயல்படுத்தலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 26

பொருள்: திட்டப் பணிகள் பகுதி II- 2008–09–ம் ஆண்டுக்கான நடமாடும் தண்ணீர் கசிவு கண்டறியும் மற்றும் பழுதுபார்க்கும் வாகனம் (புளூபிரிகேட்) வாங்குவதற்கு ரூ.170.00 லட்சங்கள் அனுமதிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது – கோவை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ.10.00 லட்சத்தில் நடமாடும் தண்ணீர் கசிவு கண்டறியும் மற்றும் பழுதுபார்க்கும் வாகனம் (புளூபிரிகேட்) வாங்குவதற்கு மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பு.

பார்வை: அரசு ஆணை எண்.90 ந.நி.ம.கு.வ.(மா.ந.II) துறை நாள்.22.5.2008.

பார்வையில் கண்ட அரசு ஆணையில் திட்டப்பணிகள் பகுதி II- 2008–09ம் ஆண்டுக்கான நடமாடும் தண்ணீர் கசிவு கண்டறியும் மற்றும் பழுதுபார்க்கும் வாகனம் (புளூபிரிகேட்) வாங்குவதற்கு ரூ.170.00 லட்சங்கள் அனுமதிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. இதில் 7 மாநகராட்சிகள் மற்றும் 10 சிறப்பு நிலை நகராட்சிகளுக்கும் ரூ.10.00 லட்சம் வீதம் திட்டப்பணிகள் பகுதி II - 2008–2009–ன் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையில் கோவை மாநகராட்சிக்கு ரூ.10.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, திட்டப்பணிகள் பகுதி II– 2008–09–ன் கீழ் ரூ.10.00 லட்சத்திற்கு நடமாடும் தண்ணீர் கசிவு கண்டறியும் மற்றும் பழுதுபார்க்கும் வாகனம் (புளூபிரிகேட்) வாங்குவதற்கு மாமன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.7259/08/ப.வ.(எம்)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 127 நாள் : 17.06.08</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 27

ஜவகர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்தவும், தற்போது இயக்கத்திலுள்ள பாதாள சாக்கடை திட்டத்தினை புனரமைக்கவும் ரூ. 377.13 கோடி மதிப்பில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறையின் அரசாணை ( 3 டி ) எண் 25 நாள் 24.10.2007–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

மேற்படி பணிக்கான மதிப்பீடு கீழ்கண்டவாறு 6 பணித்தொகுப்புகளாக பிரிக்கப்பட்டன.

| வ. எண் | பணித் தொகுப்பு | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | பணி – I | மண்டலங்கள் – I, II, V மற்றும் VI –ல் கழிவு நீர் குழாய்கள் அமைக்கும் பணி. | 6918.00 |
| 2. | பணி – I I | மண்டலங்கள் – III மற்றும் VII-ல் கழிவு நீர் குழாய்கள் அமைக்கும் பணி. | 5221.00 |
| 3. | பணி – III | மண்டலங்கள் – IV மற்றும் VIII-ல் கழிவு நீர் குழாய்கள் அமைக்கும் பணி. | 10301.00 |
| 4. | பணி – IV | உக்கடம் கழிவு நீர் பண்ணையில் 70 எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி | 5637.00 |
| 5. | பணி – V | நஞ்சுண்டாபுரம் பகுதியில் 40 எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி. | 3463.00 |
| 6. | பணி – VI | ஒண்டிபுதூர் பகுதியில் 60 எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி. | 5121.00 |

மேற்கண்ட பணித் தொகுப்புகளில் பணி தொகுப்பு I மண்டலங்கள் – I, II, V மற்றும் VI –ல் கழிவு நீர் குழாய்கள் அமைக்கும் பணி 09.04.2008–ல் முதன் முறையாக தொழில் நுட்ப தகுதி ( Technical Bid ) மற்றும் ஒப்பந்த விலைப்புள்ளி (Financial Bid) பெறப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியது.

1. **M/S SUBAYA CONSTRUCTIONS PVT LIMITED, CHENNAI.**
   **(மெசர்ஸ். சுப்பையா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.)**

2. **M/s. TCL & SEW, (JV)CONSTRUCTIONS LIMITED, HYDRABAD.**
   **(மெசர்ஸ். டிசிஎல் அன்டு எஸ் இ டபிள்யூ, கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் லிமிடெட், ஹைதராபாத்.)**

மேற்படி இரண்டு நிறுவனங்களின் தொழில் நுட்ப தகுதியினை மாநகராட்சி ஒப்பந்த கூராய்வு குழு முழு ஆய்வு செய்யப்பட்டு சென்னையிலுள்ள Technical Standing Committee (தொழில்நுட்ப வழிகாட்டும் கூட்டம்) பரிசீலனையின் மூலம் தொழில்நுட்ப ரீதியில் M/S SUBAYA CONSTRUCTIONS PVT LIMITED, CHENNAI என்ற நிறுவனம் தகுதியானது என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி நிறுவனம் தொழில் நுட்ப ரீதியில் தகுதி பெற்றதால் மேற்படி நிறுவனத்தின் விலை குறித்தான ஒப்பந்தவிலைப்புள்ளி உறை (Price Bid) 20.05.2008–ல் திறக்கப்பட்டு, கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

<u>ஒப்பு நோக்கு பட்டியல்</u>

| வ.எண் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | திருத்திய மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ. இலட்சத்தில்) | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | 51.11 | 56.59 | 103.48 | 102.43% கூடுதல் |

பெறப்பட்ட ஒரு நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி வழங்கிய M/S SUBAYA CONSTRUCTIONS PVT LIMITED, CHENNAI என்ற நிறுவனத்திடம் பொறியியல் நடை முறை விதிகளின் படி விலை குறைப்பு கோரப்பட்டதில் கீழ் குறிப்பிட்டுள்ள விபரப்படி விலை குறைப்பு செய்து தர ஒப்புக் கொண்டு 30.05.2008–ல் சம்மதக் கடிதம் அளித்துள்ளதன் பேரில் தயாரிக்கப்பட்ட திருத்திய ஒப்பந்தப்புள்ளி விபரம்

<table>
<tr><th rowspan="2">வ. எண்</th><th rowspan="2">நிறுவனம்</th><th colspan="2">கட்டுமானப்பணி</th><th colspan="2" rowspan="2">நடப்பு ஆண்டு விலைவிகிதத்திற்கு விலை குறைப்பிற்கு பின் உள்ள தொகைக்கு ஒப்பிடுதல்</th></tr>
<tr><th>விலை குறைப்பிற்கு முன் (ரூ. இலட்சத்தில்)</th><th>விலை குறைப்பிற்கு பின் (ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">மெசர்ஸ். சுப்பையா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை</td><td rowspan="2">10348.00 (102.43 % கூடுதல்)</td><td rowspan="2">8518.00 (66.63 % கூடுதல்)</td><td>விலை குறைப்பிற்கு பின் (ரூ.8518.00 லட்சம்)</td><td>நடப்பு ஆண்டு விலைவிகிதத்திற்கு மதிப்பீடு தொகை (ரூ. 5659 லட்சம்)</td></tr>
<tr><td colspan="2">50.51% கூடுதல்</td></tr>
</table>

எனவே கட்டுமானப் பணிக்கு மதிப்பீட்டு விகிதத்தைவிட நடப்பு ஆணடு விலைவிகிதத்திற்கு 50.51% கூடுதலாக கணக்கிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு –

மண்டலங்கள் – I, II, V மற்றும் VI –ல் கழிவு நீர் குழாய்கள் அமைக்கும் பணிக்கு விலை குறைப்பிற்கு பின் மதிப்பீட்டுத் தொகையை விட 50.51 % கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ். சுப்பையா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம்.

ந.க.எண் 12069 /06 /எம்.டி.3 (தொகுப்பு I)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 128 நாள் : 17.06.08</u>

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள பணித்தொகுப்பு I- பணியான மண்டலங்கள் I,II, V மற்றும் VI-ல் கழிவு நீர்குழாய் அமைக்கும் பணிக்கு விலை குறைப்பிற்குப்பின் ரூ. 8518.00 இலட்சம் தி/ள். சுப்பையா கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தினரால் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட்டுள்ளது. இது 2007-08ம் ஆண்டின் விலைவிபரப் பட்டியலுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையைவிட 66.63% சதவீதம் கூடுதலாகும்.

மேலும் இந்த தொகை ரூ. 8518.00 இலட்சம் நடப்பாண்டு 2008-09ம் ஆண்டின் தரப்படுத்தப்பட்ட விலைவிபரப் பட்டியலுடன் ஒப்புநோக்கும்போது 50.51% கூடுதலாக உள்ளது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தி/ள். சுப்பையா கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ‘‘ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின்’’ முடிவிற்கு அனுப்பலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி